


SHOT ON OPPO

# அரசு மகளிர் கலைக்கல்லூரி (த)

# புதுக்கோட்டை

# " கொரோனா வைரஸ் பற்றிய விழிப்புணர்வு"

# வணிகவியல் துறை

18.02.2020,19.02.2020 ஆகிய இரண்டு நாட்கள் வணிகவியல் துறையைச் சார்ந்த மூன்றாமாண்டு முதல்சுழற்சி பயிலும் 55 மாணவிகள் மற்றும் திருமதி. ச.சுதர்ஷினி செல்வி மு. அன்புமலர் ஆகிய கௌரவ விரிவுரையாளர்கள் புதுக்கோட்டையில் உள்ள காமராஜபுரத்திற்கு சென்று "கொரோனோ வைரஸ்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு மகளிர் கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் பா.புவனேஸ்வரி அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் பின்னர் கொரோனா வைரஸ் பற்றியும் அதன் தொற்றிற்கான காரணங்கள், அறிகுறிகள் பற்றியும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் மாணவிகள் மக்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தனர். இருமல், தும்மல், வரும்போது கைகுட்டைகளை பயன்படுத்தவும், கைகுலுக்குதலை தவிர்க்கவும், கண், வாய், மூக்கு ஆகியவற்றை அடிக்கடி தொடுவதை தவிர்க்கவும், கைகளை அடிக்கடி சோப்பு போட்டு நன்கு தேய்த்து கழுவவும், நோய் தொற்று அறிகுறிகள் இருப்பவர்களை தனிமைப்படுத்தவும் நோய் தொற்று உள்ளவர்கள் முகமூடி அணியவும் அறிவுறுத்தப்பபட்டது.